# பணி நிறைவு வாழ்த்து!

## திருமிகு P. சகாயராஜன்



நாள்:30-03-2024

பணி நிறைவு என்பது வாழ்விலோர்
பருவத்தின் நிறைவைச் சொல்லும்!
கல்வியிலே முதல் நிலையை கடந்து வந்து,
பணியிலே பயணிக்கும் காலம்,

இல்லறம் ஏற்கும் இயன்நிலையோடு
மங்கா புகழ் கொள் மக்கள் செல்வம்,
பெயரன் பெயர்த்தியுமாய்,
வாழ்வின் பரிணாமம் வளர்ந்து நிறையும்!

முதுமை தன்னின் முகவரி எழுத,
பணியின் நிறைவு நம்மைப் பக்குவப்படுத்தும்!
மூன்றாம் நிலையாம் வாழ்வியல் கலன் இதில்,
உள்ளம் பொங்கி உவகையோடு வாழ்ந்திருக்க,



சென்றதை நினைத்து சிந்தை கொள்ளாமல்,
வருவதின் மீதும் வருத்தம் காணாமல்,
அழகிய மனமாய் ஆனந்த நிலையாய்
மனத்தை நிறுத்த மகிழ்வுடன் நகரும்!

பணியை நோக்கி பயணப்படுகையில்,
**மின்சார வாரியம்,** கலனாய் நிறைந்து,
ஓட்டுநர் பணியில் உவகையில் நிறைந்து
ஒவ்வொரு நாளும் மகிழ்வுடன் இருந்து,



இன்று பணி நிறைவு காணும், **சகாய ராஜன்,**
நோய் நொடி யற்று, ஆரோக்கிய மாதாவின்
அருளுடன் வாழ, வல்லவனாம்
இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்!
அன்புடன்,

**கு.ப. அசோகன், 30-03-2024**